273

273

2859

2819

தியாக சிகரம்

ஒரு தேசீய நாடகம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 APR 1939
MADRAS

894.8112

காரைக்குடி, முத்துப்பட்டணம்
கே. எஸ். சிங்காரவேல் பிள்ளை
எழுதியது

★

★

All rights reserved

கதைச் சுருக்கம்

"தியாக சிகரம்"

பாரதபுரிக் கோட்டையை கற்கோட்டை மன்னன் கமலநாதன் என்பவன், படையெடுத்து வந்து முற்றுகை யிட்டிருக்கிருன். பாரதபுரி மக்கள் கலக்கமடைந்திருக்கின்றனர். அந்நாட்டின் அரசனுன ராஜசிம்மன், ஸ்தீரீ லோலனுக சதா கேளிக்கையில் மூழ்கிக் கிடக்கிருன். அவன் மனைவி, விமலாதேவி நாட்டின் நிலையுணர்ந்து வருந்துகிருள். பாரதபுரி மந்திரி, அரசன் பேரால் கொடுங்கோலாட்சி புரிகிருன். விடுதலை ஆர்வங்கொண்ட மக்கள் ஒன்றுகூடி 'பிரஜாமண்டலம்' என்ற சங்கத்தை ஏற்படுத்தி அதன் தலைவனுக அரசனின் சிறிய தந்தை மகன் ஜெயசீலனை நியமனம் செய்கிருர்கள். விமலாதேவி இந்த சங்கத்திற்கு ஆதரவு கொடுத்திருக்கிருள் இந்த நிலையில் நாடகம் ஆரம்பமாகிறது.

காட்சிகள்

காட்சி 1. ரகுநாதன்—மதிவாணன் என்ற இரு பாரதபுரி வாசிகள் ஓர் வீதியில் தோன்றி, நாட்டின் நிலைமை பற்றி சம்பாஷிக்கிருர்கள். (கதையின் ஆரம்ப காலத்தை விளக்கும் காட்சி இதுவாகும்.)

2819

17 APR 1939
MADRAS

அவனை வரவேற்று ஆசனத்தில் அமரும் படி சொல்லி விட்டு, அவனிடம் தன் சூழ்ச்சியை வெளியிடுகிறான். அங்கு ராஜ சிம்மன் வருகிறான். மந்திரியும், சேனாதி பதியும், அறுபது பெண்கள் விஷயத்தைச் சொல்லி தங்கள் வலையில் அவனைச் சிக்கும் படி செய்கிறார்கள்.

அந்தப்புரம்

காட்சி 9. ராணி விமலாதேவி, தோழிகளுடன் சம் பாஷித்துக் கொண்டிருக்கிறாள். பிரஜா மண்டலத்தாரை கைதுசெய்தது பற்றியும் நாட்டின் நிலைமை பற்றியும் வருந்துகிறாள். மற்றொரு தோழி அங்குவந்து, மந்திரியின் சதியாலோசனையைக் கூறி நாளை, நாடு, அன்னியர் கைவசமாகப் போவதைப் பற்றி விவரிக்கிறாள். வெகுண்டெழுந்த விமலா, தேசத் துரோகிகளை ஒழிப்பதாக வும், நாட்டைக் காப்பதாகவும் சபதம் செய்கிறாள்.

கோட்டை வாசல்

காட்சி 10. கதவு மெதுவாக திறக்கப்பட்டு, ராஜசிம்ம னும், சோமநாதனும் வருகிறார்கள். அவர் கள் அறியாமல் முகமூடியணிந்த விமலா வந்து ஒளிந்து அங்கு நடப்பதைக் கவனிக் கிறாள், கஜவாகு ஓர் வீரனுடன் வரு கிறான். இருதரப்பினரும் ஒப்பந்தம் செய்து கொண்டு பிரிகிறார்கள். விமலா வும் நடந்ததை அறிந்து கோட்டைக்குள் செல்கிறாள்.

ராஜசிம்மன் படுக்கையறை

காட்சி 11. கலங்கிய மனதுடன் அங்கு உலாவுகிறான். மாறி மாறித் தோன்றும் மனக் கலக்கத்தி லிருந்து விடுபட மதுவையருந்தி தூங்கு கிறான். விமலா முகமூடியணிந்து அங்கு வருகிறாள். அவள் மனம் குழப்பமாகிறது. பிறகு துணிந்து கணவனைக் கத்தியால் குத்திக் கொலை செய்து விட்டு ஓடிவிடு கிறாள்.

மந்திரி சோமனாதன் வீடு

காட்சி 12. சோமனாதன் தூக்கம் பிடிக்காமல் மனக் கலவரத்துடன் சங்கடப்பட்டுக் கொண் டிருக்கிறான். அங்குசேனாதிபதி வருகிறான். இருவரும் மனோராஜ்யத்தில் இருக்கும் போது, ராஜசிம்மனின் கொலைச்செய்தி அவர்களுக்கு அறிவிக்கப்படுகிறது. இருவ ரும் அரண்மனையை நோக்கி ஓடுகிறார்கள்.

ஓர் வீதி:— ரகுநாதனும், மதிவாணனும்

காட்சி 13. ராஜ சிம்மனின் கொலையைப் பற்றி இரு வரும் சம்பாஷிக்கிறார்கள். அரண்மனையை நோக்கி இருவரும் செல்கிறார்கள்.

அரண்மனை வாசல்

காட்சி 14. போர்வீரரும், சேனாதிபதியும், மந்திரியும் நின்றுகொண்டிருக்கிறார்கள். விமலாதேவி வருகிறாள். அவள் கட்டளையிட்டபடி மந் திரியும் சேனாதிபதியும் சிறைப் படுத்தப் படுகிறார்கள். பிரஜா மண்டலத்தாரை விடு தலை செய்யுமாறு உத்திர விடுகிறாள்.

சிறைச்சாலை

காட்சி 15. ஜெயிலதிகாரியின் கட்டளைக்கிணங்க வேலை செய்து கொண்டிருந்த ஜெயசீலன் முதலியோர் வேலை செய்ய மறுத்து கோஷ மிடுகின்றனர். ஜெயிலதிகாரி அவர்களை அடிக்கிறார். இத்தருணத்தில் அவர்களை விடுதலை செய்யுமாறு ராணியின் கட்டளை வருகிறது. அதே சமயம் மந்திரியும் சேனாதிபதியும் கை விலங்குடன் அங்கு கொண்டு வரப் படுகிறார்கள். விடுதலை பெற்ற தேசத் தொண்டர்கள், தேசீய கீதம் பாடிக் கொண்டு வெளியே போகிறார்கள்.

ஓர் வீதி:— ரகுநாதனும், மதிவாணனும்.

காட்சி 16. இருவரும் தேசத்தி லேற்பட்ட குதுகலத்தைப் பற்றி சம்பாஷிக்கிறார்கள்.

பிரஜா மண்டலக் கூட்டம்

காட்சி 17. ராணி விமலா தேவி, பகைவரை வெல்லுவதற்கான முறைகளை வெளியிடுகிறாள்.

கமலநாதன் படைவீடு

காட்சி 18. விமலாவின்சாகசம். கமலநாதன் கொல்லப் படுகிறான். கற்கோட்டைப் படைகள் முறியடிக்கப் படுகின்றனர்.

ஓர் வீதி

காட்சீ 19. மதிவாணனும், ரகுநாதனும் வருகிறார்கள். விமலா அக்கினிப் பிரவேசமாகப் போகும் விஷயத்தைக் குறித்து இருவரும் வருந்துகிறார்கள்.

விமலா அக்கினிப் பிரவேசம்

காட்சி **20.** உணர்ச்சி மிகுந்த விமலாவின் பேச்சு, விமலா அக்கினியில் பிரவேசிக்கச் செல்கிறாள்.

தியாக சிகரம் விமலாவின் உருவச்சிலை

காட்சி **21.** அதன் முன் தொண்டர்களும் பாரதபுரித் தலைவன் ஜெயசீலனும் தேசிய கீதம்பாடி வணங்குகிறார்கள்.

நாடகம் முடிகிறது.

சுபம்.

ஊழியன் பிரஸ், காரைக்குடி.